## முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

அசல் வழக்கு எண்.7/2024

நாள் : 23.09.2024

வா.சா.1 திருமதி.ஜம்ருத் பேகம் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொத்து சம்மந்தமாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துகளில் பாகம் கோரி தாவாவை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்குண்டான விவரத்தினை நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். தாவா சொத்திற்கு மொத்தம் 4 இலக்க சொத்துக்கள் உள்ளன. தாவா சொத்துகளை குறித்து 1 முதல் 3 பிரதிவாதிகள் Written Statement ஐ தாக்கல் செய்துள்ள விவரம் எனக்குத் தெரியும். எதிர்வழக்குரையில் தாவா 1, 3 மற்றும் 4 இலக்க சொத்துக்கள் எனது தகப்பனார் முகமது மைதீன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் எதிர்வழக்குரையில் தாவா 2வது இலக்க சொத்தானது 1ம் பிரதிவாதிக்கும், மற்றும் அவரது சகோதரர் அம்சாவிற்கும் கிரையமாக பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அம்சா என்பவர் யார் என்று எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாரி பொறுத்து சொல்லப்பட்டுள்ள கிரைய சங்கதிகளை நான் மறுக்கிறேன்.

தாவா 1வது இலக்க சொத்தானது RS மங்களம் அக்தாகமால் பாட்சா தெருவில் உள்ளது. அதில் 3 வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல. 4 வீடுகள் உள்ளது. தாவா 2வது இலக் சொத்தானது ஆர்எஸ் மங்கலம் ஜாகிர்உசேன் தெருவில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தாவா 1 இலக்க சொத்தானது ஜாகிர் உசேன் தெருவிலும், 2வது இலக்க சொத்தானது அக்தாகமால் பாட்சா தெருவில் உள்ளது என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் தாவா 1 இலக்க சொத்தில் 3 வீடுகள் உள்ளது என்றால்

சரிதான். தாவா 2 இலக்க சொத்தில் 4 வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

தாவா 2 வது இலக்க சொத்தில் உள்ள வீட்டினை இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் அம்சா ஆகியோரும் மலேசியாவிற்கு சென்று வேலை செய்து ஈட்டிய வருமானத்தில் கட்டிய வீடு என்று சொன்னால் சரியல்ல. அவர் வருமானத்தை வைத்து அந்த வீட்டினை கட்டியதால்தான் அவர்கள் பெயரில் வீட்டுவரி ரசீது ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ரசீதுகளை அவர்களே போட்டுக்கொண்டார்கள். 1ம் பிரதிவாதியும் மற்றும் அவரது சகோதரர் அம்சா என்பவரும் அவர்களின் பெயரில் சுமார் 20 வருடங்களாக வரி ரசீது போட்டுக்கொண்டார்கள் என்றால் சரிதான். ஆனால் அதை அவர்களே போட்டுக்கொண்டார்கள். 1ம் பிரதிவாதியின் பெயரில் வீட்டு ரசீதை அவர்களுடைய சகோரரர் அம்சா பெயரில் வீட்டு ரசீது ஏற்படுத்தியது குறித்து நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் எனக்கு தற்பொழுது தான் தெரியவந்ததது.
இந்த விவரம் எனக்கு வழக்கு தாக்கல் செய்த பின்புதான் தெரியவந்தது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டும் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் பெயரில் ஏற்பட்ட ரசீதுகள் குறித்து நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் இல்லை.

தாவா 1வது இலக்க சொத்திற்கு எனது தகப்பனார் பெயரில் வரி ரசீது உள்ளது. எனது தகப்பனார் 1997ல் மலேசியாவில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாயார் 2007ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாரின் இரண்டாவது மனைவியின் மகன் அம்சா என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் பெயர் அப்துல் லத்தீப். முகமது மைதீன் மனைவி லேட் அஸ்மா பிவி அவர்கள் மகன் அம்சாவிடம் இருந்து, எனது கணவர் அப்துல் லத்தீப் 1999 ல் கிரையம் வாங்கினார். எனது சகோதரி ஜன்னத்பீவீ, 3ம் பிரதிவாதி ப்ரீதாபீவி வாங்கியுள்ளார்.

என்னிடம் காட்டப்படும் 24.09.1999ம் தேதி கிரைய பத்திரத்தில்

கண்ட காதர்சா என்ற சின்னத்தம்பி ராவுத்தர் குமாரர் அப்துல் லத்தீப் எனது கணவர் என்று சொன்னால் சரிதான். எனது கணவர் அஸ்மா பீவி மகன் அம்சா என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற பத்திரம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் ஆனது பி.வா.சா.ஆ.1 ஆகும். (வாதி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. )மேற்படி அஸ்மா பீவியின் கணவர் முகமது மைதீன் எனது தகப்பனார் என்றால் சரிதான். எனது கணவர் கிரையம் வாங்கியது எனது தகப்பனாரின் இரண்டாவது மனைவியின் மகனிடம் இருந்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் 4 முதல் 8 பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வருகிறார்கள்.

தாவா சொத்தில் உள்ள ஒரு வீட்டில் இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ள 8 ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார். மற்ற இரண்டு வீடுகளில் ஒரு வீடு இடிந்து விழுந்துவிட்டது. மற்றொரு வீட்டை தற்பொழுது காலி செய்தார்கள். இந்த வழக்கில் காட்டப்படும் 7 பிரதிவாதி மற்றொரு வீட்டில் குடியிருந்து காலி செய்துவிட்டார். அவர் எப்பொழுது வாடகைக்கு வந்தார். வாடகைக்கு எவ்வளவு கொடுத்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. மேற்படி வாடகை விவரத்தை 7, 8 ம் பிரதிவாதிகளிடம் கேட்டு தெரிந்து கொண்டேன்.

தாவா 2வது இலக்க சொத்தில் 4 வீடுகள் உள்ளது. அந்த 4 வீடுகளில் ஒரு வீடுகளில் ஆட்கள் இல்லை. மற்ற 3 வீடுகளில் வாடகைக்கு இருக்கிறார்கள். அந்த 3 வீடுகளில் குடியிருக்கும் நபர்கள் எவ்வளவு வாடகைக்க இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. மற்ற ஒரு வீடானது பெரிய வீடாகும். மேற்படி அந்த வீட்டில்தான் எனது தாயார் வசித்து இறந்துவிட்டார். அந்த வீட்டினை நான் பார்த்து கொண்டது நான்தான். தாயார் இறந்தபின்னிட்டு அந்த வீட்டின் சாவியானது என் வசம் உள்ளது. மேற்படி தாவா சொத்துக்களின் ஆவணங்கள் அனைத்தும் இந்த வீட்டில்தான் இருந்தது.

மேற்படி வீட்டில் உள்ள ஆவணங்கள் மற்றும் வீட்டில் உள்ள ஜாமான்கள் என் வசம் தான் உள்ளது என்றால் ஆவணங்கள் இருந்தது ஆனால் அதை கரையான் அறுத்துவிட்டது. ஜாமான்கள் மற்றும் எனது தாயாருக்குண்டான நகைகள் இல்லை. எனது தாயார் இறந்தபின்னிட்டு எனது தாயாரின் 6 பவுன் நகையை நான் அந்த வீட்டில் இருந்ததால் அதை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

எனது தகப்பனார், தாயார் வசித்து வந்த வீட்டில்தான் மேற்படி சொத்துக்களுக்குண்டான அனைத்து ஆவணங்களும் இருந்தது என்றும், அதை நான் கைப்பற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை நான் தாக்கல் செய்தால், 2 வது தாவா இலக்க சொத்தினை 1ம் பிரதிவாதி மற்றும் அம்சா வாங்கிய சொத்தின் கிரைய பத்திரம் இருப்பதால், அதை மறைத்து ஆவணங்களை கரையான் அறுத்துவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா 2வது இலக்க சொத்தானது 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரரும் கிரையம் பெற்று, சொந்த வருமானத்தை வைத்து வீடுகட்டி வாடகைக்கு விட்டிருந்தார்கள் என்றும், அதில் எனக்கு பங்கு எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதியின் கணவர் சம்சுதீன் என்றால் சரிதான். அவர்தான் தாவா 1 மற்றும் 2 இலக்க சொத்துக்களில் உள்ள வீடுகளில் வாடகை வசூல் செய்து வருகிறார் என்றால் சரிதான். அந்த சொத்துக்களுக்கு அவர்தான் வரி செலுத்திவந்தார் என்றால் சரிதான். அவ்வாறு வாடகை வந்த பணத்தில் ரூ.1,00,000/– ஐ பிரித்து எனக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் ரூ.1,00,000/– வாங்கி 5 வருடம் ஆகிறது. ஆனால் அதற்கு பின்னால்தான் எனக்கு வாடகை தரவேண்டும்.

நான் வாடகை எனக்கு பிரித்து கொடுக்க வேண்டும் என்று ஜமாத்தில் மனு எதுவும் கொடுக்கவில்லை. 1 மற்றும் 2 வது இலக்க

சொத்துக்களுக்கு வரியை 3ம் பிரதிவாதியின் கணவர் சம்சூதீன் செலுத்திவருகிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் உள்ள 1, 3 மற்றும் 4 ஆகிய சொத்துக்களில்தான் எனக்கு பாகம் கிடைக்கக்கூடியது என்றும், தாவா 2 வது இலக்க சொத்தானது அவர்கள் சுயமாக சம்பாதித்த சொத்து என்பதால் அதில் நான் பாகம்கோர முடியாது என்றால் சரியல்ல. 2 வது இலக்க சொத்தில் உள்ள ஒரு வீடும் நான் பூட்டியுள்ளதால் அந்த வீடும் தற்பொழுது பராமரிக்கும் நிலையில் இல்லை.

நான் கோரியபடி 1, 3 மற்றும் 4 வது இலக்க சொத்தினை குறித்து பாகம் பிரிப்பதில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை சரிதான். தாவா 2 இலக்க சொத்தினை குறித்து தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .